29.08-2024 அ.வ.எண்.358/2023 PW-1

| | |
|---|---|
| பெயர் | சிவசாமி |
| த.பெ. | ராமசாமி |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். நான் என் மனைவியுடன் ஒரே வீட்டில் தான் உள்ளேன். 23.05.1985 ம் தேதி எனக்கும் என் சகோதரர்கள் அவிநாசிக்கவுண்டர், பழனிச்சாமி, ராமசாமி ஆகியோருக்குள் பாகம் ஏற்பட்டது என்றால் சரிதான். அவிநாசிக்கவுண்டரின் வாரிசுகள் தான் இந்த பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். எங்களுக்குள் ஏற்பட்ட பாகபத்திரத்தில் அவிசாசிக்கவுண்டருக்கு பி பாக சொத்தும் எனக்கு டி பாக சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவிசாசிக்கவுண்டருக்கு அந்த பாகத்தின் அடிப்படையில் க.ச. எண். 481 ல் மொத்தமாக ஒரு ஏக்கரா 65 சென்ட் மற்றும் மத்த சொத்துக்களும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதே போல் எனக்கு க.ச. எண். 481 ல் மொத்தம் 2 ஏக்கரா 17 சென்ட் ஒதுக்கப்பட்டது. எனக்கும் அவிநாசிக்கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் இரண்டுமே ஒரே காலையில் உள்ளது என்றும் அது அருகருகே உள்ள ஒட்டுனார் போன்ற பூமி என்றால் சரிதான்.

1985 ல் பாகம்பிரிந்த சமயத்தில் அந்த க.ச.எண். 481 காலையில் உள்ள பூமிகளானது உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பாகம் பிரிக்கப்பட்ட பின்னர் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் அவரவர்கள் சுவாதீனத்தில் இருந்து வந்தோம் என்றால் சரிதான். நான் 28.02.2013 ம் தேதியன்று நான் என் மனைவி அங்கம்மாளுக்கு ஒரு தான செட்டில்மென்ட் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மென்ட் பத்திரத்தில் நான் 2 ஏக்கரா 35 சென்ட் என்றும் மற்றும் கிணற்றில் மோட்டார் பம்பு செட் முழுவதும் என்று எழுதி வைத்தேன் என்றால் சரிதான். அந்த மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றில் பிரதிவாதிகளுக்கும் பாதி பங்கு உள்ளது என்றால் சரிதான். நான் பாகப்படி எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை விட 17 சென்ட் பூமி அதிகமாக என் மனைவிக்கு எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கானது என் மனைவிக்கு தான செட்டில்மென்ட் எழுதி வைத்த பின்னர் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த போது என் பெயரில் சொத்து இல்லை என்றும் என் மனைவி பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த போது என் மனைவி பெயரில் எழுதி வைத்துள்ள விவரத்தை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கில் அதை பற்றி கூறியுள்ளேன். அவ்வாறு வழக்கில் கூறவில்லை என்று சொன்னால் அது

தவறு. பிரதிவாதிகள் அவர்களுடைய எதிர்வழக்குரையில் சொத்து உங்களுடையது அல்ல என்று சொன்னதற்கு பின்பு தான் என் மனைவி அவரை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்து கொள்ள வேண்டும் என்று மனு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எதிராகவும் இந்த வழக்கில் அந்த மனுவினை என் மனைவி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் தவறு. அதற்கு பின்னர் 04.05.2018 ம்தேதி நான் என் மனைவிக்கு 28.02.2013 ம் தேதி எழுதி வைத்த தான செட்டில்மென்டினை ரத்து செய்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான். அந்த தான செட்டில்மென்ட் இரத்தானது இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் தான் செய்தேன் என்று சொன்னால் சரிதான்.

அவிசாசிக்கவுண்டர் RDO அலுவலகத்தில் க.ச. எண். 481 காலையில் உள்ள இடத்தில் கூடுதலாக உள்ள சொத்தினை பொருத்து தனக்கு ஒதுக்கி கொடுக்கும் படி மனு கொடுத்து அது தற்போது நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அப்போது சம்மன் பெறப்பட்டு நானும் விசாரணைக்கு சென்ற சமயத்தில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருவதால் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ள கூறி அனுப்பி வைத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். அதே போல் க.ச. எண். 481 சொத்து தொடர்பாக மற்றொரு வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கும் அந்த மற்றொரு வழக்கும் இந்த வழக்கு சொத்தான க.ச. எண். 481ல் உள்ள சொத்து தொடர்பாக தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த இரண்டு வழக்குகளுமே என்னை பிரதிவாதிகள் தொந்தரவு செய்யக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பட்டா சிட்டா மற்றும் மற்ற வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகபத்திரத்தின் அடிப்படையில் இல்லை என்று சொன்னால் சரிதான். அதே போல் நான் இந்த சொத்தினை என்னுடைய தான் என்று விளம்புகை செய்ய வேண்டும் என்று பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ஆனால் வழக்கில் அவ்வாறு விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்று சொன்னால் தவறு. கடந்த 14.10.2013 ம் தேதியன்று அவிநாசிக்கவுண்டரின் மனைவி பூவாத்தாள் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் சர்வேயர் மூலமாக அளந்து நட்ட கல்லினை நான் பிடிங்கியதாக புகார் கொடுத்தார் என்றால் அந்த கல் சர்வேயர் மூலம் வைத்த கல் அல்ல பொலியில் இருந்த கல். அதை எடுத்ததற்கு புகார் கொடுக்கப்பட்டது. க.ச. எண். 481ல் உள்ள கிணற்றில் இருந்து மின் இணைப்பு மூலம் தண்ணீர் எடுத்து கொள்வதில் எனக்குள்ள உரிமையினை பிரதிவாதிகள் எந்த காலக்கட்டத்திலும் தடுக்கவோ மறுக்கவோ இல்லை என்று சொன்னால் தவறு. நான் தான் அந்த கிணற்றின் முழு உரிமையினை அடைய வேண்டும் என்பதற்காக தான் முழுவதுமாக நான் என் மனைவி பெயரில் எழுதி வைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 11ல் நான் என் மனைவிக்கு எழுதி வைத்த தான செட்டில்மென்ட் பத்திரத்தில் நான் கிணறும் அதிலுள்ள மின் இணைப்பு பூராவும் என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் கூறியுள்ளது போல் 14.05.2014ல் 1ம் பிரதிவாதியான அவிநாசிக்கவுண்டர் கிணற்று மின் இணைப்பின் பீஸ் கேரியரை பிடுங்கவோ தடுக்கவோ இல்லை என்று சொன்னால் தவறு. நான் தான் 1ம் பிரதிவாதியின் சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பாக பத்திரத்தில் உள்ள சொத்தினை விட கூடுதலாக எழுதி வைத்துள்ளேன் என்று சொன்னால் தவறு. கடந்த 14.05.2014ல் பீஸ் கேரியரை பிடிங்கியதாக சொல்வதற்கு நான் போலீசில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த ஆவணத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தவறு. நான் எனது முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் பத்தி எண். 5ல் குறிப்பிட்டுள்ள என் மகள் மீது கொண்ட கருத்து வேறுபாட்டால் இந்த வழக்கின் சொத்தினை என் மனைவிக்கு எழுதி வைத்ததாக கூறியுள்ள சங்கதிகளை நான் வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். நான் பிரதிவாதிகளை அலைக்கழிக்க வேண்டும் என்று தான் இந்த வழக்கின் தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனக்கு உரிமையும் பாத்தியமும் இல்லாத சொத்தினை நான் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக இந்தவழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு. பாக பத்திரத்தின் சரத்துக்களை மறைக்கப்பட்டு வருவாய் துறை ஆவணங்கள் பெறப்பட்டு அதனடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு.

வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வழக்கு சொத்தானது என் பெயரில் இல்லாத போது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு உரிமைமூலம் இல்லை என்று சொன்னால் தவறு. இவ்வழக்கானது வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிற்கான வழக்குமூலமே ஏற்படவில்லை என்று சொன்னால் தவறு. வழக்கு மூலம் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

Sd/- V.Monika
District Munsif cum Judicial Magistrate,
Annur